மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி .
அசல் வழக்கு எண். 23/18

2019 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 05ம் நாள் சாட்சியான பிடபிள்யு.1 நபரின் வாக்குமூலம். 1969 ம் ஆண்டு 54 வது விதிகள் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு. வ. இரத்தினகிரி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | = பாரதிதாசன் | தொழில் | = |
| த/பெ | = | கிராமம் | = |
| வயது | = | ஊர் | = |
| ஜாதி | = | வட்டம் | = |
| சமயம் | = | மாவட்டம் | = |

மு.வி.

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை எழுத்துமூலம் பிரமாண பத்திரிக்கை மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன்..

06.06.2006ல் என் பெயரிலும் , 2ம் வாதி பெயரிலும் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 20.09.1991ல் வாதிகளுக்கு கிரையம்செ காடுத்த முன் கிரையதாரரான குமரேசன் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.2, முத்துசாமி செட்டியார் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்டநகல் வா.சா.ஆ.3, தாவா சொத்திற்கு என் பெயரில் ஏற்பட்ட பட்டா வா.சா.ஆ.4, தாவா சொத்திற்கு என் பெயரில் ஏற்பட்ட சொத்து வரி இரசீது வா.சா.ஆ.5, தாவா சொத்தில் வாதியின் பெயரில் உள்ள குடிநீர் கட்டண இரசீது வா.சா.ஆ.6, தாவா சொத்திற்கு நான் செலுத்திய மின் கட்டண இரசீது வா.சா.ஆ.7, தாவா சொத்தை பொறுத்து மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞர் ஆணையர் தாக்கல்செய்த அறிக்கை சி1, வரைபடம் சி2 ஆகும். (மேற்படி வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.